අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/04/59/04/05/21(තාවා)
ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.
දිනය / திகதி / Date 2024.04.

நே.ப. இல.: .............

திரு/ திருமதி/ செல்வி ..................................................................

..................................................................

..................................................................

***இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்த்தல் (மட்டுப்படுத்தப்பட்ட) 2019 (2020) – தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கு அழைத்தல்.***

இல. 1925/37 மற்றும் 2015.07.28ம் திகதியுடையதாக அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட மற்றும் அன்று முதல் அமுலில் உள்ள இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதன் திருத்தங்களின் பிரகாரம் தரம் III இற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்குரிய அடிப்படைத் தகைமைகளைப் பரிசோதிப்பதற்காக நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய தாங்கள் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுகின்றீர்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

02. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாடம்/ பாடங்களின் கீழ் அதற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று/ திகதிகளில் பத்தரமுல்ல, பெலவத்தை, இசுருபாய கல்வி அமைச்சின் 04ம் மாடி கேட்போர் கூடத்திற்கு வருகை தருமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

| பாடம் | திகதி | நேரம் | சபை இலக்கம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

03. அன்றைய தினத்தில் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக இந்த அழைப்புக் கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை ஆகியன சமர்ப்பிக்கப்படல் வேண்டும். **மேலதிக தகைமைகளுக்கு புள்ளி வழங்குவதற்காக** கீழே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களதும் மூலப் பிரதிகள் உள்ளடங்கிய கோவையொன்று மற்றும் அதே ஆவணங்களின் தங்களால் உண்மையான பிரதியென உறுதிப்படுத்தப்பட்ட நகல் பிரதிகள் உள்ளடங்கிய நகல் கோவை ஒன்றையும் கீழே தரப்பட்டுள்ள வரிசைப்படி கோவைப்படுத்தி தயாரித்துக் கொள்ளவேண்டும் என்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட இரண்டு (02) கோவைகளின் மீதும் நேர்முகப் பரீட்சை இலக்கம், சபை இலக்கம், பாடம் மற்றும் பெயர் ஆகியவற்றைக் குறிப்பிட்டு (www.moe.gov.lk இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள கோவையின் அட்டைக்குரிய மாதிரிப் படிவத்தை

*பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்) தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை சபையின் முன்னிலையில் சமர்ப்பித்தல் வேண்டும். தாங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான பாடங்களுக்குரிய அடிப்படைத் தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர் ஒருவராயின் ஒவ்வொரு பாடங்களுக்கும் தனித்தனியாக கோவைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.*

i. *பூரணப்படுத்தப்பட்ட இணைப்பு I மாதிரிப் படிவம் (*www.moe.gov.lk *இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் அதனை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்.) இதன் மூலப் பிரதியை நிழற் பிரதிகள் கோவையினுள் உள்ளடக்குவது போதுமானது.*

ii. *அடிப்படைத் தகைமைகளுக்குரியதல்லாத கல்வி அல்லது உரிய பாடங்கள் தொடர்பான பட்டப் பின் பட்டச் சான்றிதழ்கள்*

iii. *அடிப்படைத் தகைமைகளுக்குரியதல்லாத பட்டப் பின் டிப்ளோமா சான்றிதழ்கள்*

iv. *இரண்டாம் மொழி சிங்களம்/ இரண்டாம் மொழி தமிழ் ஆகிய பாடங்களின் கீழ் எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின், அரச கரும மொழிகள் திணைக்களத்தின் சிங்களம்/ தமிழ் மட்டம் II இல் சித்தி அல்லது க.பொ.த (சா.த) இரண்டாம் மொழி சிங்களம்/ தமிழ் பாடத்தில் திறமைச் சித்தியுடன் அரச கரும மொழிகள் திணைக்களத்தின் வாய்மூலப் பரீட்சையில் சித்தியடைந்தமைக்குரிய சான்றிதழ் (இதன் கீழ் இரண்டாம் மொழி சிங்களப் பாடத்திற்கு தமிழ் மொழிச் சான்றிதழுக்கும் இரண்டாம் மொழி தமிழ் பாடத்திற்கு சிங்கள மொழிச் சான்றிதழுக்கும் புள்ளிகள் வழங்கப்படும்)*

v. *ஆட்சேர்ப்புக்காக விண்ணப்பம் கோரும் வர்த்தமானி அறிவித்தலின் உப அட்டவணை I இன் இலக்கம் 02 இன் கீழ் ஆங்கில மொழித் தேர்ச்சிக்குரியதாக பெற்றுள்ள சான்றிதழ்கள் (ஆங்கிலப் பாடத்தின் கீழ் பரீட்சையில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்கு முன்னிலைப்படுத்திய சான்றிதழ்களுக்கு மேலதிகமாக உள்ள சான்றிதழ்கள்)*

vi. *ஆட்சேர்ப்புக்காக விண்ணப்பம் கோரும் வர்த்தமானி அறிவித்தலின் உப அட்டவணை I இன் இலக்கம் 03 இன் கீழ் தகவல் தொழில்நுட்பத் தேர்ச்சிக்குரியதாக பெற்றுள்ள சான்றிதழ்கள் (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாடத்தின் கீழ் பரீட்சையில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரர்கள் பொது நேர்முகப் பரீட்சைக்கு முன்னிலைப்படுத்திய சான்றிதழ்களுக்கு மேலதிகமாக உள்ள சான்றிதழ்கள்)*

**க.கொ. -** *தங்களால் சமர்ப்பிக்கப்படும் பட்டங்கள், டிப்ளோமாக்கள் மற்றும் சான்றிதழ் பாடநெறிகளுக்குரிய சான்றிதழ்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டம் வழங்கும் நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழாக இருத்தல் வேண்டும் என்பதுடன் குறித்த சான்றிதழ்களில் பாடநெறிக் காலம் குறிப்பிடப்படவில்லை எனின் சான்றிதழை வழங்கிய நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொண்ட பாடநெறிக் காலத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணம் ஒன்றை நேர்முகப் பரீட்சை சபையின் முன்னிலையில் சமர்ப்பித்தல் வேண்டும். பட்டப் பின் பட்டம் மற்றும் பட்டப் பின் டிப்ளோமா ஆகியவற்றை சமர்ப்பிக்கும் போது விவரிக்கப்பட்ட பெறுபேறுகள் குறிப்புப் படிவத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.*

***அத்துடன் நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கும் அனைத்து சான்றிதழ்களும் 2020.11.06ம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்தவையாக இருத்தல் வேண்டும்.***

04. மேலதிக தகைமைகளுக்கு புள்ளிகளை வழங்குவதற்கு அவசியமான அனைத்து சான்றிதழ்கள் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட நகல் பிரதிகளையும் அன்றைய தினத்தில் நேர்முகப் பரீட்சை சபை முன்னிலையில் சமர்ப்பிப்பது கட்டாயமாகும் என்பதுடன் பின்னராக சமர்ப்பிக்கப்படும் சான்றிதழ்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன். இணைப்பு I மாதிரிப் படிவத்தை வலயக் கல்விப் பணிப்பாளரால் பூரணப்படுத்தி செயன்முறைப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும். (இணைப்பு I மாதிரிப் படிவம் www.moe.gov.lk இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதுடன் அதனை பதிவிறக்கம் செய்துகொள்ள வேண்டும்.)

05. தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சை ஆகியன ஒவ்வொரு பாடங்களுக்கும் வெவ்வேறாக நடாத்தப்படும் என்பதுடன் தாங்கள் ஒன்றிற்கு மேற்பட்ட பாடங்களுக்குரிய அடிப்படைத் தகைமைகளை பூரணப்படுத்தியிருக்கும் விண்ணப்பதாரர் ஒருவர் எனின், குறித்த ஒவ்வொரு பாடங்களுக்காகவும் தனித்தனியாக தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். ***தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோருவதற்குரிய வர்த்தமானி அறிவித்தலின் உப அட்டவணை I இன் படி புள்ளிகள் வழங்கப்படும்.***

06. செயன்முறைப் பரீட்சைக்கு உச்ச பட்சம் 50 புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன் குறித்த பரீட்சையானது **பாடக் குறிப்புக்களை தயாரித்தல் மற்றும் முன்வைப்பு** என்பதாக இரண்டு பகுதிகளைக் கொண்டிருக்கும். முதலாவதாக, பாடம் சார்ந்ததாக அச் சந்தர்ப்பத்தில் வழங்கப்படும் சில தலைப்புக்களில் இருந்து எதேர்ச்சையாக ஒரு தலைப்பினைத் தெரிவு செய்து அதன் கீழ் 45 நிமிடங்களுக்குரிய பாடக் குறிப்பு ஒன்றைத் தயாரித்தல் வேண்டும். இரண்டாவதாக, தயாரிக்கப்பட்ட பாடக் குறிப்பினை நேர்முகப் பரீட்சை சபையின் முன்னிலையில் 15 நிமிடங்களுக்கு முன்வைப்புச் செய்ய வேண்டும். அவசியம் எனின் நூல்களை கொண்டுவருவதற்கும், தாங்கள் கொண்டுவரும் Laptop கணிணியைக் கொண்டு தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளும் இணைய இணைப்பினைப் பயன்படுத்தி இணையத் தளங்களை பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பமளிக்கப்படும் என்பதுடன் தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்ளவோ, சமூக வலைதளங்களைப் பயன்படுத்தவோ (உ+ம்:-whatsapp, youtube, facebook, skype போன்ற) அல்லது மின்னஞ்சல் போன்ற எந்தவொரு வெளி நபர்களுடனும் தொடர்புகொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பமளிக்கப்படமாட்டாது. அவ்வாறே கொண்டுவரும் Laptop இற்கு மின்சார இணைப்பு வழங்கப்படமாட்டாது என்பதால் அவற்றை மின்னேற்றம் (Charge) செய்து கொண்டுவரல் வேண்டும் என்பதுடன் கையடக்கத் தொலைபேசி அல்லது Tab போன்ற கருவிகளை அருகில் வைத்துக்கொள்ள சந்தர்ப்பமளிக்கப்படமாட்டாது. பாடத் திட்டத்தை தயாரிப்பதற்காக கடதாசி வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் கற்பித்தல் உபகரணங்கள் மற்றும் உதவிச் சாதனங்களை தேவையானவாறு கொண்டுவந்து பயன்படுத்த முடியும். பாடத் திட்டத்தை தயாரிக்க வேண்டிய மாதிரி அமைப்பு

*(இணைப்பு II)* www.moe.gov.lk *இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், அதனை பதிவிறக்கம் செய்து அதன் அச்சுப் பிரதியைக் கொண்டு வரல் வேண்டும். அவ்வாறே செயன்முறைப் பரீட்சைக்கு புள்ளி வழங்கும் விதம் "செயன்முறைப் பரீட்சைக்கான புள்ளி வழங்கல் திட்டம்" எனும் தலைப்பில் தாங்கள் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில்* www.moe.gov.lk *எனும் இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

**க.கொ. :** *உரிய திகதியில் உரிய நேரத்தில் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை மற்றும் செயன்முறைப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என்பதுடன் அவ்வாறு சமூகமளிக்கான விண்ணப்பதாரர்களுக்கு வேறு வாய்ப்புக்கள் வழங்கப்படமாட்டாது.*

07. *இத் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை அல்லது செயன்முறைப் பரீட்சைக்கு அழைத்தல் அல்லது அதில் பங்கேற்பது இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையின் தரம் III இற்கு நியமனம் பெற்றுக் கொள்வதற்கான உரிமையாகாது என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*ஒப்பம்: ஜே.எம் திலகா ஜயசுந்தர*
*செயலாளர்*

*ஆர். டீ ஜமிந்த*
*சிரேஷ்ட உதவிச் செயலாளர்*
*(கல்விச் சேவைகள் தாபனம்)*